முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம்: - 04/2014

எனது இலக்கம்: - DMS/Cir/04/2014
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு 01
2014.09.25

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் முதன்மைச் செயலாளர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்க வங்கிகள் மற்றும்
முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்க வங்கிகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றின் உத்தியோகத்தர்களுக்கான அரசகரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதலும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைச் செலுத்துதலும்**

அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவைகளைப் போன்று, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்க வங்கிகள், முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றிலும் அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது என 2013.06.20 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

02. அதற்கிணங்க, அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்க வங்கிகள் மற்றும் முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றில் 2013.07.01 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் சேவையில் இணைந்த அரசகரும மொழிக்கு மேலதிகமாக குறித்த பதவியுடன் தொடர்புடைய வகையில் மற்றைய அரசகரும மொழியில், இந்த சுற்றறிக்கை பயன்வலுப் பெறும் திகதியிலிருந்து ஐந்து (05) வருடங்களில் அல்லது சேவையில் இணைந்து ஐந்து (05) வருடங்களில் தேர்ச்சியைப் பெறுவது அவசியமாகும்.

03. பதவிகளுக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளின் அடிப்படையில் தேவையான மற்றைய அரசகரும மொழி தேர்ச்சி மட்டம் நான்கு வகுதிகளைக் கொண்டதாக அமையும்.

அத்தேர்ச்சி மட்டத்தை அடைவதற்குச் சித்தியடைய வேண்டிய பரீட்சைகள் மற்றும் அவற்றுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| தேர்ச்சி மட்டம் | **சம்பள வகுதி (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 30 இற்கு இணங்க)** | **சித்தியடைய வேண்டிய பரீட்சை** | **செலுத்தப்படும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு*** |
|---|---|---|---|
| 1 வகுதி | HM, AR 2 | 1 ஆம் தேர்ச்சி மட்டத்திற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரிட்சை | ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படும் ரூபா. 25,000/- கொடுப்பனவு மற்றும் சம்பள ஏற்றமொன்றுக்குச் சமனான மாதாந்த கொடுப்பனவொன்று. |
| 2 வகுதி | MM, AR 1 | 2 ஆம் தேர்ச்சி மட்டத்திற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரிட்சை | ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படும் ரூபா. 22,500/- கொடுப்பனவு மற்றும் சம்பள ஏற்றமொன்றுக்குச் சமனான மாதாந்தக்கொடுப்பனவொன்று. |
| 3 வகுதி | JM, MA | 3 ஆம் தேர்ச்சி மட்டத்திற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரிட்சை | ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படும் ரூபா. 20,000/- கொடுப்பனவு மற்றும் சம்பள ஏற்றமொன்றுக்குச் சமனான மாதாந்த கொடுப்பனவொன்று. |
| 4 வகுதி | PL | 4 ஆம் தேர்ச்சி மட்டத்திற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மொழிப் பரீட்சை | ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படும் ரூபா. 15,000/- கொடுப்பனவு மற்றும் சம்பள ஏற்றமொன்றுக்குச் சமனான மாதாந்த கொடுப்பனவொன்று. |

* இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள ஏற்றமொன்றுக்குச் சமனான மாதாந்த கொடுப்பனவை, ஓய்வூதியம் / ஊழியர் சேமலாப நிதியம்/ ஊழியர் நம்பிக்கை

நிதியம் / ஓய்வூதியப் பணிக்கொடை என்பவற்றைக் கணிக்கும் போது கவனத்தில் கொள்ளக் கூடாது. அதேபோன்று இக்கொடுப்பனவுகள் 2013.07.01 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே ஏற்புடையதாகுதல் வேண்டும்.

04. மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வகுதிகளுக்கான எழுத்துப் பரீட்சைகள், அரசகரும மொழிகள் திணைக்களத்தின் சார்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினாலும் வாய்மொழிப் பரீட்சைகள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினாலும் 2014 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடத்திலும் இரண்டு தடவைகள் நடாத்தப்படுதல் வேண்டும்.

05. உத்தியோகத்தரொருவர் க.பொ.த.(சா.த) பரீட்சையில் இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடத்தில் சாதாரண சித்தியைப் பெற்றிருப்பின், மேற்குறித்த தேர்ச்சி நான்காவது தேர்ச்சி மட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படுவர்.

06. மேலே 3 ஆம், 4 ஆம் தேர்ச்சி மட்டங்களுக்கான எழுத்து மற்றும் வாய்மொழிப் பரீட்சைகளுக்குப் பதிலாக ஆகக் குறைந்தது முறையே 150 மணித்தியாலங்கள் மற்றும் 100 மணித்தியாலங்கள் கொண்ட, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டத்திற்கு இணங்கிய வகையில் நடாத்தப்படும் பாடநெறியொன்றைப் பூர்த்தி செய்து அதன் இறுதியில் நடாத்தப்படும் எழுத்து மற்றும் வாய்மொழிப் பரீட்சைகளில் சித்தியடைவது போதுமானதாகும்.

07. உத்தியோகத்தரொருவர், ஏற்கனவே 03 ஆம் பந்தியில் உள்ளடங்காத ஏதேனும் மொழித் தேர்ச்சிக்கான தகைமையினைப் பெற்றிருப்பின் அரசகரும மொழிகள் ஆணையாளரின் உடன்பாட்டுடன் பெற வேண்டிய மொழித் தேர்ச்சிகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்ற தேவைப்பாட்டிலிருந்து விடுவிக்க முடியும்.

08. இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க, மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டிய உத்தியோகத்தர்கள், குறித்த குறித்த காலப்பகுதியினுள் மொழித் தேர்ச்சியை பெறுவதற்குத் தவறுவார்களாயின், குறித்த காலப்பகுதி பூர்த்தியடைந்ததன் பின்னர் குறித்த உத்தியோகத்தர்களின் அடுத்துவரும் சம்பள ஏற்றங்களைச் செலுத்தாதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். குறித்த தகைமைகளைப் பூர்த்தி செய்யும் வரை இச்சம்பள ஏற்றங்களைச் செலுத்தாது இடைநிறுத்தி வைப்பது அவசியமாகும்.

09. 2013.07.01 ஆந் திகதிக்கு முன்னர் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான வங்கிகள், முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றில் சேவையில் இணைந்து கொண்ட



Contd.

உத்தியோகத்தர்கள் தங்களது விருப்பத்தின் அடிப்படையில் தாங்கள் தற்போது உள்ள ஊழியர் தரத்திற்குரிய அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெறுவார்களாயின் அவர்கள் மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஊக்குவிப்புக் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமையைப் பெறுவர். எவ்வாறாயினும், சிங்களம் மற்றும் தமிழ் மொழித் தேர்ச்சியை அடிப்படைத் தகைமையாகக் கொண்டுள்ள ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.

10. ஒரு தடவை மற்றைய அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்தரொருவர் ஒரே சேவை நிலையத்தில் தரப்படுத்தப்பட்ட தரமுயர்வின் போது மற்றைய அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்பதுடன் ஒரே சேவை நிலையமாயினும் வேறு பதவிக்கு நியமனம் பெறுவதாயின் அப்பதவிக்குரிய மற்றைய அரசகரும மொழியில் தேர்ச்சி பெறுவது அவசியமாகும்.

11. ஆங்கில மொழி மூலம் சேவையில் இணையும் உத்தியோகத்தர்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ள விதத்தில் அரசகரும மொழிகளில் தேர்ச்சி பெறுவது அவசியாகும்.

I. ஒரு அரச கரும மொழியில் தாய் மொழிக்கான மட்டத்திலும் மற்றைய அரசகரும மொழியில் தற்போது வகிக்கும் பதவிவிக்குரிய இரண்டாம் மொழித் தேர்ச்சிக்குரிய மட்டத்திலும் தேர்ச்சி பெறுவது அவசியமாகும்.

II. தான் எந்த அரசகரும மொழியில் தாய் மொழி மட்டத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்பதை உத்தியோகத்தர் தனது விருப்பத்தின் அடிப்படையில் தீர்மானிக்க முடியும். தகுதிகாண் காலத்தில் தாய் மொழி மட்டத்திலான தேர்ச்சியைப் பெற வேண்டிய அதேவேளை, இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும் விதத்தில், ஐந்து (05) வருட காலத்தில் பதவியுடன் தொடர்புடைய மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி மட்டத்தைப் பெறுவது அவசியமாகும்.

III. ஆங்கில மொழி மூலத்தில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவர் தான் சேவையில் இணைவதற்கு முன்னர் அல்லது சேவைக் காலத்தில் க.பொ.த (சா.தரப்) பரீட்சையில் சிங்கள /தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தில் சித்தியடைந்திருப்பாபாராயின், அந்த அரசகரும மொழியில் தாய் மொழி மட்டத்திலான தேர்ச்சி பெறும் தேவைப்பாட்டை அவர் பூர்த்தி செய்துள்ளதாகக் கருதுதல் வேண்டும்.

IV. ஆங்கில மொழி மூலத்தில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் இரண்டாம் மொழித் தேர்ச்சி மட்டத்தைப் பெறுவதற்கு 03 ஆம் பந்தியின் ஏற்பாடுகளைப் ஏற்புடையதாக்கிக் கொள்ள முடியும்.

12. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான வங்கிகள் மற்றும் முழுமையாக அரசாங்கத்துக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றில் ஆங்கில மொழி மூலத்தில் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், அரசகரும மொழிகள் இரண்டிலும் தேர்ச்சியைப் பெற்றதன் பின்னர் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க தாய் மொழி அல்லாத மற்றைய அரசகரும மொழிக்காக மாத்திரம் கொடுப்பனவுகளைப் பெற முடியும்.

13. 2013.06.20 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிஞர் குழுவினால் முன்வைக்கப்படும் பாடத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வகுதிக்குமான பாட நூல்களைத் தயாரித்தல், அவற்றின் அடிப்படையில் தேர்ச்சி மட்டத்திற்குப் பொருத்தமான பயிற்சி மொடியூல்களைத் தயாரித்தல் மற்றும் அப்பயிற்சி மொடியூல்களை இடைத்தொடர்பாடல் கொண்ட இறுவட்டுக்களாகத் தயாரித்தல் மற்றும் அந்த அரசகரும மொழிப் பாடநெறிகளுக்கான மொடியூல்களை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஊடாக விளம்பரப்படுத்துவதற்கு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

14. மேலே 13 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மொடியூல்களைத் தயாரிக்கும் வரையில் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெறுவதற்கு மிகவும் பொருத்தமான புத்தகங்களை இனங் காண்பதற்கும், அப்புத்தகங்களின் வறுடப்பட்ட (Scan செய்யப்பட்ட) PDF பிரதிகளை அரசகரும மொழிகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கும் அப்பிரதிகளின் போதியளவு பிரதிகளை அச்சிட்டு அவற்றை தேவையான அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான வங்கிகள், முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றின் உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் அரசகரும மொழிகள் ஆணையாளரினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

15. மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட வகுதிகளுக்கான பாடத் திட்டங்களுக்கு இணங்க ஒவ்வொரு வகுதியினதும் தேர்ச்சி மட்டத்திற்குப் பொருத்தமானதாகத் தயாரிக்கப்படும் மாதிரி வினாத்தாள்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களம், அரசகரும மொழிகள் திணைக்களம் என்பவற்றால் தயாரிக்கப்பட்டு அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான வங்கிகள், முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றில் பணிபுரியும் ஊழியர்களின் பயன்பாட்டுக்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

16. 30ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க மீள்கட்டமைக்கப்பட்ட பதவியணி மற்றும் சம்பளத் திட்டங்களுக்கு அங்கீகாரம் பெற்றிராத நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் பெற வேண்டிய மொழி தேர்ச்சி மட்டங்களைத் தீர்மானிப்பதற்காகவும் அரசகரும மொழித் தேர்ச்சி தொடர்பில் காலத்துக் காலம் எழும் பிரச்சினைகள் தொடர்பில் தேவையான தீர்மானங்கள் எடுப்பதற்காகவும் பின்வரும் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்படும். மேலும் அரசகரும மொழி தேர்ச்சிக்காக ஏற்கனவே ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குகின்ற ஒரு நிறுவனமாயின், இச்சுற்றறிக்கைக்கு இணங்க குறித்த கொடுப்பனவுகளைச் செம்மையாக்கம் செய்வதற்காகவும் பின்வரும் உத்தியேகாத்தர் குழுவிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

I. முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகம் (தலைவர்)

II. அரசாங்க தொழில்முயற்சிகள் பணிப்பாளர் நாயகம் / தேசிய வரவுசெலவுத்திட்டப் பணிப்பாளர் நாயகம்.

III. அரசகரும மொழிகள் ஆணையாளர்

17. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மூலம் விதிக்கப்பட்டுள்ள அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருப்பதைப் பாராட்டாக உத்தியோகத்தர்களின் வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள், பயிற்சிநெறிகள், பட்டப்பின் பாடநெறிகள் என்பவற்றுக்கு விண்ணப்பிக்கும் போது, அந்த அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றிருக்கும் உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

18. அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள், அரசாங்கத்துக்குச் சொந்தமான வங்கிகள், முழுமையாக அரசுக்குச் சொந்தமான கம்பனிகள் என்பவற்றுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய அரசகரும மொழி தொடர்பான ஏற்பாடுகள் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க திருத்தப்பட்டுள்ளதாகக் கருதிச் செயற்படுவது அவசியமாகும்.

ஒப்பம்/பீ.பி. ஜயசுந்தர
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் -

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. செயலாளர், அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு
5. செயலாளர், கல்வி அமைச்சு
6. செயலாளர், தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
7. கணக்காய்வாளர் நாயகம்
8. செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு
9. செயலாளர், தேசிய சம்பள ஆணைக்குழு
10. செயலாளர், நிதி ஆணைக்குழு
11. பரீட்சை ஆணையாளர் நாயகம் - இலங்கை பரீட்சை திணைக்களம்
12. பணிப்பாளர் நாயகம் - அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களம்
13. பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
14. அரசகரும மொழிகள் ஆணையாளர் - அரசகரும மொழிகள் திணைக்களம்
15. பொதுக் கோவை